JUDICIAL FORM NO.53

(See Rule 42)
DEPOSITION OF WITNESS
(Chapter XXII, Cr.P.C)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE COURT, BHAVANI

Deposition of LW- - Pw-1 Witness
for Prosecution

| CC.No. | 08/2026 | Crime No. | | Station | Bhavani |
|---|---|---|---|---|---|

| Name | PW.1சுரேஷ் | Village |
|---|---|---|
| Father's Name/Husband's Name | | Taluk |
| Age | | Calling |
| The Oath was administered to the witness by Tmt.K.Sivakami, Bench Clerk and was solemnly affirmed by the witness in accordance with the provisions of Oaths Act of 1969 on 09.03.2026 | | |

**எதிரி ஆஜர் இல்லை. எதிரி தரப்பில் குவிமுச பிரிவு 355ன் கீழ் மனு அளிக்கப்பட்டு, மனு அனுமதிக்கப்பட்டது.**

**முதல் விசாரணை**

நான் தற்போது, அம்மாபேட்டை காவல் நிலையத்தில் தலைமை காவலராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 26.04.2025–ம் தேதியன்று காலையில் நிலைய சிறப்பு உதவி ஆய்வாளர் ஜெயராமன் என்பவர் என்னையும், காவலர் ஸ்ரீதர் என்பவரையும், அழைத்துக் கொண்டு நிலைய சரகத்தில் அனுமதியற்ற முறையில் மது விற்பனை மற்றும் சூதாட்ட தடுப்பு அலுவலக ரோந்து பணியில் ஈடுபட்டிருந்தபோது எங்களுக்கு கிடைத்த ரகசிய தகவலின் படி குறிச்சி, குச்சிக்கல்லூர், செங்காட்டுத் தோட்டம் அருகில் உள்ள முட்புதரில் உள்ள மறைவில் காலை சுமார் 8.00 மணிக்கு கண்காணித்தபோது, அங்கு சந்தேகப்படும்படி தனது கையில் இரண்டு பிளாஸ்டிக் பாட்டில்களில் ஏதோ வைத்துக்கொண்டு நின்றிருந்த எதிரி எங்களைக் கண்டதும் ஓட முயற்சித்த வரை சுற்றிப் பிடித்து விசாரித்த போது, தனது பெயர் பொன்னுசாமி என்றும், தனது முகவரியையும் கூறினார்.

பின்னர் தான் தனது தோட்டத்தில் உள்ள பனைமரத்திலிருந்து பனைமரக் கல்லை தமிழக அரசு அனுமதியின்றி சட்டவிரோதமாக சுமார் 5 லிட்டர் அளவிற்கு விற்பனை செய்வதற்காக வைத்திருப்பதாகக் கூறி தனது குற்றத்தை ஒப்புக்கொண்டவரை கைதுக்கான காரணம் கூறி காலை 08.15 மணிக்கு சிறப்பு உதவி ஆய்வாளர் உச்சநீதிமன்ற வழிகாட்டுதலின்படி முறைப்படி கைது செய்தார். பின்னர் பொதுமக்கள் யாரும் சாட்சியம் அளிக்க முன் வராததால் எங்கள் இருவரின் முன்னிலையில், மேற்படி

RAJKUMAR J
Digitally signed by RAJKUMAR J
Date: 2026.03.10 18:18:21 +0530

கல்லை சிறப்பு உதவியாளர் கைப்பற்றுதல் மகஜர் மூலம் கைப்பற்றினார். அந்த கைப்பற்றுதல் மகஜரில் நானும், என் உடன் வந்த காவலர் ஸ்ரீதர் என்பவரும் கையொப்பம் செய்தோம். தற்போது, என்னிடம் காட்டப்படும் கைப்பற்றுதல் மகஜரில் உள்ள முதலாவது சாட்சி கையொப்பம் என்னுடையது தான். **கைப்பற்றுதல் மகஜர் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. காலை 8:30 மணிக்கு கைப்பற்றுதல் மகஜர் மூலம் கைப்பற்றிய கல்லை பொதுமக்கள் யாரும் சாட்சியம் அளிக்க முன் வராததால் எங்கள் இருவர் முன்னிலையில் அன்றைய தினம் 08.45 மணிக்கு அழித்தல் மகஜர் தயார் செய்து, அந்த இடத்திலேயே மண்ணில் கீழே கொட்டி கைப்பற்றப்பட்ட கல் அளிக்கப்பட்டது. பிளாஸ்டிக் பாட்டில்களையும், அங்கேயே உடைத்து மண்ணில் பாதுகாப்பாக புதைக்கப்பட்டது. அழித்தல் மகஜரில் நானும், என்னுடன் வந்த காவலர் ஸ்ரீதர் என்பவரும் கையொப்பம் செய்தோம். தற்போது, என்னிடம் காட்டப்படும் அளித்தல் மகஜரில் உள்ள முதலாவது சாட்சி கையொப்பம் என்னுடையதுதான். **அழித்தல் மகஜர் அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** பின்னர் கைது செய்த எதிரியுடன் நிலையம் வந்து சிறப்பு உதவி ஆய்வாளர் நிலைய குற்ற எண்.109/2025 சட்டப்பிரிவுகள் 4(1)(C) TNP ACT கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தார். புலன் விசாரணை அதிகாரி என்னை விசாரித்தார்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

கைப்பற்றி அளிக்கப்பட்டதாக சொல்லும் மதுபானங்கள் எதுவும் வீடியோ பதிவு எதுவும் பதிவு செய்யவில்லை என்றால், சரிதான். எதிரி எங்களை பார்த்ததும் ஓட முயற்சித்தான் என்றால், சரிதான். எதிரி கையில் எத்தனை லிட்டர் கேன் வைத்திருந்தார் என்றால், 2, 5 லிட்டர் கேன் வைத்திருந்தார். மேற்படி விவரத்தை தான் நான் போலீஸ் விசாரணையின் போது சொன்னேன் என்றால், சரிதான். நான் முதல் விசாரணையில் சொல்வது போல், சொன்ன நேரத்தில், சொன்ன விதத்தில், சம்பவம் எதுவும் நடைபெறவில்லை என்றாலும், புள்ளி விவர கணக்கிற்காக போடப்பட்ட வழக்கிற்கு எனது உயர் அதிகாரியின் வேண்டுகோளுக்கிணங்க பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால், சரியல்ல.

**மறு விசாரணை இல்லை**

Signature of Witness

Taken down before me in open court
readover to the witness in the presence
of the accused pleads and admitted by
him/her to be correct

RAJKUMAR J
Digitally signed by RAJKUMAR J
Date: 2026.03.10 18:18:28 +0530

Sd/– (J.RAJKUMAR)
Judicial Magistrate No.1, Bhavani

JUDICIAL FORM NO.53

(See Rule 42)
DEPOSITION OF WITNESS
(Chapter XXII, Cr.P.C)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE COURT, BHAVANI

Deposition of LW-   - Pw-2 Witness
for Prosecution

| CC.No. | 08/2026 | Crime No. | | Station | Bhavani |
|---|---|---|---|---|---|

| | | | |
|---|---|---|---|
| Name | **PW.2 ஸ்ரீதர்** | Village | |
| Father's Name/Husband's Name | | Taluk | |
| Age | | Calling | |
| The Oath was administered to the witness by Tmt.K.Sivakami, Bench Clerk and was solemnly affirmed by the witness in accordance with the provisions of Oaths Act of 1969 on 10.03.2026 | | | |

**எதிரி ஆஜர் இல்லை. எதிரி தரப்பில் குவிமுச பிரிவு 355ன் கீழ் மனு அளிக்கப்பட்டு, மனு அனுமதிக்கப்பட்டது.**

**முதல் விசாரணை**

நான் தற்போது, அம்மாபேட்டை காவல் நிலையத்தில், காவலராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 26.04.2025–ம் தேதியன்று காலையில் நிலைய சிறப்பு உதவி ஆய்வாளர் ஜெயராமன் என்பவர் என்னையும், தலைமை காவலர் சுரேஷ் என்பவரையும், அழைத்துக் கொண்டு நிலைய சரகத்தில் அனுமதியற்ற முறையில் மது விற்பனை மற்றும் சூதாட்ட தடுப்பு அலுவலக ரோந்து பணியில் ஈடுபட்டிருந்தபோது எங்களுக்கு கிடைத்த ரகசிய தகவலின் படி குறிச்சி, குச்சிக்கல்லூர், செங்காட்டுத் தோட்டம் அருகில் உள்ள முட்புதரில் உள்ள மறைவில் காலை சுமார் 8.00 மணிக்கு கண்காணித்தபோது, அங்கு சந்தேகப்படும்படி தனது கையில் இரண்டு பிளாஸ்டிக் பாட்டில்களில் ஏதோ வைத்துக்கொண்டு நின்றிருந்த எதிரி எங்களைக் கண்டதும் ஓட முயற்சித்த வரை சுற்றிப் பிடித்து விசாரித்த போது, தனது பெயர் பொன்னுசாமி என்றும், தனது முகவரியையும் கூறினார்.

பின்னர் தான் தனது தோட்டத்தில் உள்ள பனைமரத்திலிருந்து பனைமரக் கல்லை தமிழக அரசு அனுமதியின்றி சட்டவிரோதமாக சுமார் 5 லிட்டர் அளவிற்கு விற்பனை செய்வதற்காக வைத்திருப்பதாகக் கூறி தனது குற்றத்தை ஒப்புக்கொண்டவரை கைதுக்கான காரணம் கூறி காலை 08.15 மணிக்கு சிறப்பு உதவி ஆய்வாளர் உச்சநீதிமன்ற வழிகாட்டுதலின்படி, முறைப்படி கைது செய்தார். பின்னர் பொதுமக்கள் யாரும் சாட்சியம் அளிக்க முன் வராததால் எங்கள் இருவரும் முன்னிலையில் மேற்படி கல்லை சிறப்பு உதவியாளர் கைப்பற்றுதல் மகஜர் மூலம் கைப்பற்றினார். அந்த கைப்பற்றுதல் மகஜரில் நானும், என் உடன் வந்த தலைமை காவலர் சுரேஷ் என்பவரும்

RAJKUMAR J Digitally signed by RAJKUMAR J Date: 2026.03.10 18:18:37 +0530

கையொப்பம் செய்தோம். தற்போது, என்னிடம் காட்டப்படும் கைப்பற்றுதல் மகஜரில் உள்ள இரண்டாவது சாட்சி கையொப்பம் என்னுடையது தான். காலை 8:30 மணிக்கு கைப்பற்றுதல் மகஜர் மூலம் கைப்பற்றிய கல்லை, பொதுமக்கள் யாரும் சாட்சியம் அளிக்க முன் வராததால் எங்கள் இருவர் முன்னிலையில் அன்றைய தினம் 08.45 மணிக்கு அழித்தல் மகஜர் தயார் செய்து அந்த இடத்திலேயே மண்ணில் கீழே கொட்டி கைப்பற்றப்பட்ட கல் அளிக்கப்பட்டது. பிளாஸ்டிக் பாட்டில்களையும் அங்கேயே உடைத்து மண்ணில் பாதுகாப்பாக புதைக்கப்பட்டது. அழித்தல் மகஜரில் நானும், என்னுடன் வந்த தலைமை காவலர் சுரேஷ் என்பவரும், கையொப்பம் செய்தோம்.

தற்போது, என்னிடம் காட்டப்படும் அழித்தல் மகஜரில் உள்ள இரண்டாவது சாட்சி கையொப்பம் என்னுடையதுதான் பின்னர் கைது செய்த எதிரியுடன் நிலையம் வந்து சிறப்பு உதவி ஆய்வாளர் நிலைய குற்ற எண். 109/2025 சட்டப்பிரிவுகள் 4(1)(C) TNP ACT கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தார். புலன் விசாரணை அதிகாரி என்னை விசாரித்தார்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் சம்பவ இடத்திற்கு எத்தனை மணிக்கு சென்றேன் என்றால், காலை சுமார் 8.00 மணிக்கு சென்றிருப்பேன். எதிரி எங்களை பார்த்ததும் ஓடிவிட்டார் என்றால், சரிதான். ஓடும் போது எதிரில் எதையும் கையில் வைத்திருக்கவில்லை என்றால், சரியல்ல. இரண்டு பாட்டில்கள் வைத்திருந்தார். மேற்படி விவரத்தை தான் நான் போலீஸ் விசாரணையின் போது சொன்னேன் என்றால், சரிதான். பாட்டிலில் என்ன இருந்தது என்றால், பனை மரத்துக்கல் இருந்தது. ஒப்புதல் வாக்குமூலம் புலன் விசாரணை அதிகாரி வாங்கினார் என்றால், சரிதான். நான் முதல் விசாரணையில் சொல்வது போல், சொன்ன நேரத்தில், சொன்ன விதத்தில், சம்பவம் எதுவும் நடைபெறவில்லை என்றாலும், புள்ளி விவர கணக்கிற்காக போடப்பட்ட வழக்கிற்கு எனது உயர் அதிகாரியின் வேண்டுகோளுக்கிணங்க பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால், சரியல்ல.

**மறு விசாரணை இல்லை**

Signature of Witness

Taken down before me in open court readover to the witness in the presence of the accused pleads and admitted by him/her to be correct

RAJKUMAR J

Digitally signed by RAJKUMAR J
Date: 2026.03.10 18:18:45 +0530

Sd/- (J.RAJKUMAR)
Judicial Magistrate No.1, Bhavani

JUDICIAL FORM NO.53

(See Rule 42)
DEPOSITION OF WITNESS
(Chapter XXII, Cr.P.C)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE COURT, BHAVANI

Deposition of LW- - Pw-2 Witness
for Prosecution

| CC.No. | 08/2026 | Crime No. | | Station | Bhavani |
|---|---|---|---|---|---|

| Name | PW.3 ஜெயராமன் | Village |
|---|---|---|
| Father's Name/Husband's Name | | Taluk |
| Age | | Calling |
| The Oath was administered to the witness by Tmt.K.Sivakami, Bench Clerk and was solemnly affirmed by the witness in accordance with the provisions of Oaths Act of 1969 on 10.03.2026 | | |

**எதிரி ஆஜர் இல்லை. எதிரி தரப்பில் குவிமுச பிரிவு 355ன் கீழ் மனு அளிக்கப்பட்டு, மனு அனுமதிக்கப்பட்டது.**

**முதல் விசாரண**

நான் தற்போது அம்மாபேட்டை காவல் நிலையத்தில் சிறப்பு உதவியாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 26.04.2025–ம் தேதியன்று காலையில் நான் நிலைய தலைமை காவலர் சுரேஷ் மற்றும் காவலர் ஸ்ரீதர் ஆகியோர்களை அழைத்துக் கொண்டு நிலைய சரகத்தில் அனுமதியற்ற முறையில் மது விற்பனை மற்றும் சூதாட்ட தடுப்பு அலுவலக ரோந்து பணியில் ஈடுபட்டிருந்தபோது எங்களுக்கு கிடைத்த ரகசிய தகவலின் படி குறிச்சி, குச்சிக்கல்லூர், செங்காட்டுத் தோட்டம் அருகில் உள்ள முட்புதரில் உள்ள மறைவில் காலை சுமார் 8.00 மணிக்கு கண்காணித்தபோது, அங்கு சந்தேகப்படும்படி தனது கையில் இரண்டு பிளாஸ்டிக் பாட்டில்களில் ஏதோ வைத்துக்கொண்டு நின்றிருந்த எதிரி எங்களைக் கண்டதும் ஓட முயற்சித்த வரை சுற்றிப் பிடித்து விசாரித்த போது, தனது பெயர் பொன்னுசாமி என்றும், தனது முகவரியையும் கூறினார்.

பின்னர் தான் தனது தோட்டத்தில் உள்ள பனைமரத்திலிருந்து பனைமரக் கல்லை தமிழக அரசு அனுமதியின்றி சட்டவிரோதமாக சுமார் 5 லிட்டர் அளவிற்கு விற்பனை செய்வதற்காக வைத்திருப்பதாகக் கூறி தனது குற்றத்தை ஒப்புக்கொண்டவரை கைதுக்கான காரணம் கூறி காலை 08.15 மணிக்கு நான் உச்சநீதிமன்ற வழிகாட்டுதலின்படி, முறைப்படி கைது செய்தேன். பின்னர் பொதுமக்கள் யாரும் சாட்சியம் அளிக்க முன் வராததால் என்னுடன் வந்த தலைமை காவலர் மற்றும் காவலர்

RAJKUMAR J Digitally signed by RAJKUMAR J Date: 2026.03.10 18:18:52 +0530

முன்னிலையில் மேற்படி கல்லை கைப்பற்றுதல் மகஜர் மூலம் கைப்பற்றினேன். அந்த கைப்பற்றுதல் மகஜரில் என்னுடன் வந்த தலைமை காவலர் மற்றும் காவலர்களிடம் சாட்சி கையப்பம் பெற்றேன். காலை 8:30 மணிக்கு கைப்பற்றுதல் மகஜர் மூலம் கைப்பற்றிய கல்லை, பொதுமக்கள் யாரும் சாட்சியம் அளிக்க முன் வராததால் என்னுடன் வந்த காவலர் மற்றும் தலைமை காவலர் முன்னிலையில் அன்றைய தினம் 08.45 மணிக்கு அழித்தல் மகஜர் தயார் செய்து அந்த இடத்திலேயே மண்ணில் கீழே கொட்டி கைப்பற்றப்பட்ட கல் அளிக்கப்பட்டது. பிளாஸ்டிக் பாட்டில்களையும் அங்கேயே உடைத்து மண்ணில் பாதுகாப்பாக புதைக்கப்பட்டது.

மேலும், அழித்தல் மகஜரில் என்னுடன் வந்த காவலர் மற்றும் தலைமை காவலரிடம் சாட்சி கையொப்பம் பெற்றேன் பின்னர் கைது செய்த எதிரியுடன் நிலையம் வந்து நிலைய குற்ற எண்.109/2025 சட்டப்பிரிவுகள் 4(1)(C) TNP ACT கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன். முதல் தகவல் அறிக்கை **அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

பின்னர் எதிரிக்கு தேக பரிசோதனை செய்து தக்க நிலைப்படியில் விடுவித்தேன். பின்னாடி என்னுடன் வந்த தலைமைக் காவலர் மற்றும் காவலர் ஆகியோர்களை விசாரித்து தனித்தனியாக வாக்குமூலம் பதிவு செய்தேன். அன்றைய தினமே எனது புலன் விசாரணையை முடித்து எதிரி மீது சட்டப்பிரிவுகள் 4(1)(C) TNP ACT கீழ் இறுதி அறிக்கை தயார் செய்து நீதிமன்றத்தில் தாக்கல் செய்தேன்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

ரோந்து பணிக்கு எத்தனை நபர்கள் சென்றோம் என்றால், சுமார் மூன்று நபர்கள் சென்றோம். எதிரியிடமிருந்து கைப்பற்றியதாக சொல்லப்படும் பொருளை கைப்பற்றும் போது வீடியோ பதிவு எதுவும் செய்யவில்லை என்றால், சரிதான். நான் கைப்பற்றியது இரண்டு பிளாஸ்டிக் கேனில் ஐந்து லிட்டர் கல் கைப்பற்றினேன். இரண்டு, ஐந்து லிட்டர் கேனில் பகுதி அளவு கல் எடுத்துச் சென்றார் என்றால், சரிதான்.

மேற்படி, விவரத்தை நான் பதிவு செய்த விவரத்தை முதல் தகவல் அறிக்கையில் பதிவு செய்யவில்லை என்றால், சரிதான். நான் கைப்பற்றிய மதுபானத்தை பகுப்பாய்விற்கு அனுப்பவில்லை என்றால், சரிதான். நான் கைப்பற்றிய கல்லை அழிப்பதற்கு எவ்வித அனுமதியும் பெறவில்லை என்றால், சரிதான்.

மேலும், நான் புள்ளிவிவர கணக்கிற்காக போடப்பட்ட பொய் வழக்கு என்றால், சரியல்ல. நான் இந்த வழக்கில் மாதிரி வரைபடம் மற்றும் பார்வை மகஜர் தயார் செய்யவில்லை என்றால், சரிதான். நான் சொல்வது போல், சொன்ன நேரத்தில், சொன்ன விதத்தில், சம்பவம் எதுவும் நடைபெறவில்லை என்றாலும், அவ்வாறு சம்பவம் நடைபெற்றிருந்தால் நான் மாதிரி வரைபடம் மற்றும் பார்வை மகஜர் தயார் செய்திருப்பேன் என்றாலும், வீடியோவில் பதிவு செய்திருப்பேன் என்றாலும், சரியல்ல.

RAJKUMAR J
Digitally signed by RAJKUMAR J
Date: 2026.03.10 18:18:58 +0530

மேலும், நான் இந்த வழக்கில் பொதுமக்களை யாரும் சாட்சியாக விசாரிக்கவில்லை என்றால், சரிதான். நான் முறையாக புலன் விசாரணை செய்யாமல் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால், சரியல்ல.

**மறு விசாரணை இல்லை**

Signature of Witness

Taken down before me in open court readover to the witness in the presence of the accused pleads and admitted by him/her to be correct

RAJKUMAR J Digitally signed by RAJKUMAR J Date: 2026.03.10 18:19:04 +0530

Sd/– (J.RAJKUMAR)
Judicial Magistrate No.1, Bhavani